


# வாலிபர் கொலை பீதியில் கிராமம்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுக்கா பாடகம் என்ற ஊரிலிருந்து சுமார் இரண்டு கி.மீ தூரத்தில் இருக்கிறது துருவம் கிராமம். இங்கு வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வசிக்கும் நிலையில் சுமார் 40 அருந்ததியர் குடும்பங்கள் உள்ளன.

அருந்ததிய மக்கள் ஆதிக்கச் சாதியர்களுக்கு அடிமைகளாக இருக்க வேண்டிய நிலை. சிலர் அண்டை மாநிலமான கேரளாவில் கட்டட வேலைக்குச்


கொலையான சீனிவாசன்

செல்கின்றனர். இப்படிச் சென்றவர்கள் ஆதிக்கச் சாதியர்களுக்குச் சமமாகத் தங்களை உயர்த்திக்கொண்டனர். இவர்களை எப்படியாவது பழிவாங்க ஆதிக்கச் சாதியினர் சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

பிழைப்புக்காகக் கேரளாவுக்குச் சென்றவர்களில் பழனியின் குடும்பமும் ஒன்று. இனி மருத்துவமனையில் இருந்த சீனிவாசன் கூறுவதைக் கேட்போம்: நான் கேரளாவில் கட்டட வேலை செய்து வருகிறேன். சமீபத்தில் தவணையில் டூ வீலர் வாங்கியிருந்தேன். ஒவ்வொரு மாதமும் தவணைத் தொகைக் கட்ட வீட்டிற்கு வருவேன்.

இந்த மாதம் 29.12.10 அன்று தவணைத் தொகை கட்ட ஊருக்கு வந்தேன். கேரளாவில் என்னுடன் வேலை செய்து வரும் பெரியப்பா பணம் கொடுத்து அதை அவர்கள் வீட்டில் கொடுக்கும்படி கூறியிருந்தார். அதனால் அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். ஒரு குறுக்கலான பாதையில் டூவீலரில் போனபோது எதிரே மணி கவுண்டர் மனைவி தலையில் விறகுச் சுமையுடன் வந்தார்.

நான் வண்டியில் வருவதைப் பார்த்ததும் நடுரோடு பக்கமாக நடந்து வந்தார். விறகுச் சுமை என்னைக் குத்தாமல் இருக்க கையில் தடுத்தேன். அப்போது விறக்குச் சுமை கீழே விழுந்து விட்டது. டேய் சக்கிலி நாயே என்னைத் தள்ளிவிட்டுட்டியே என்று அசிங்கமாகத் திட்டினார். நான் எதுவும் சொல்லாமல் திரும்பி வந்துவிட்டேன். பிறகு கேரளா செல்வதற்குப் பாடகம் கூட்ரோட்டில் பஸ்சுக்காகக் காத்திருந்தேன். அப்போது ஆதிக்கச் சாதியரான மணி, சம்பத், வேலு, மற்றும் பெயர் தெரியாத சிலர் வந்தனர்.

டேய் சக்கிலி நாயே நீ என் பொஞ்சாதியைக் கீழே தள்ளிட்டியா? வெட்டுங்கடா இவனை என்று மணி ஆவேசமாகக் கத்தியபடி என்னை அடித்தார். கையில் பயங்கர ஆயுதங்களால் என்னைத் தாக்கினர். உயிருக்குப் பயந்து ஊருக்குள் ஓடினேன். தடுக்க வந்தவர்களையும் அடித்து உதைத்தனர். பின்தொடர்ந்து வந்து என்னைக் கத்தியால் குத்தினர். ஆங்காங்கே கத்திக் குத்து விழுந்தது. அங்கேயே என் டூ வீலரையும் எடுத்து சென்று விட்டனர்.

அதன்பிறகு உறவினர்கள் என்னை மருத்துவமனையில் சேர்த்தனர். பிறகு என் அம்மா பூங்காவனம் ஆதிக்கச் சாதியர்களிடம் சென்று என்மகனை மன்னித்து விடுங்கள், வண்டியைக் கொடுக்குமாறு கெஞ்சிக் கேட்டுள்ளார். ஆனால் அவர்களோ மணியின் மனைவி காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும், அபராதம் 50 ஆயிரம் கட்ட வேண்டும் இல்லையென்றால் ஊருக்குள் குடும்பத்தையே விடமாட்டோம் என்று கூறியிருக்கின்றனர் என்று கூறி கண்கலங்கினார்.

இந்நிலையில் குணமாகி மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குச் சீனிவாசன் டூவீலரில் வந்தபோது ஆதிக்கச் சாதியர் கும்பல் மீண்டும் கொலை வெறித்தாக்குதல் நடத்தியுள்ளனர். சீனிவாசன் மண்டையில் பலத்த காயம் பட்டு அதே இடத்தில் இறந்துவிட, வண்டியை ஓட்டிவந்தவர் வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் அட்மிட் செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட நிர்வாகம் உடனே தலையிட்டு குற்றவாளிகளான மணி மற்றும் அவரது உறவினர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து கைது செய்யவும், இறந்த தலித் குடும்பத்திற்கு நிவாரணமும் மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்டுள்ளவருக்குத் தகுந்த சிகிச்சை கிடைக்கவும் ஆவணச் செய்ய வேண்டும் என்பதே தலித் மக்களின் எதிர்பார்ப்பு!

பிரபாகர்